**ஒட்டன்சத்திரம் மாவட்டக் கல்வி அலுவலரின் (தொடக்கக்கல்வி) ( பொ )செயல்முறைகள்**

**பிறப்பிப்பவர்: திரு. தூ.சுரேஷ்பாபு, எம்.ஏ., பி.எட்., எம்.பில்.,**

**ஓ.மு .எண்:756/ஆ2/2024, நாள்:05.04.2024**

பொருள்: தொடக்கக்கல்வி – வடமதுரை ஒன்றியம் – ஆசிரியர்கள் அரசுக்கு எதிராக போராட்டத்தில் கலந்து கொண்டது – தகவலின்றி பணிக்கு வருகை புரியாத நாள்களை ஈட்டிய விடுப்பாக அனுமதிக்க தெளிவுரை வேண்டியது - தொடர்பாக

பார்வை : 1..அரசாணை (நிலை) எண்: 151 ப.க.துறை, நாள்: 09.09.2022

2 தமிழ்நாடு தொடக்கக்கல்வி இயக்குநரின் செயல்முறைகள் ந.க. எண் 30428/ஜ 1/2022 நாள் :09.12.2022.

3. அரசுக்கடித எண் 5993233/K1/2023-3 நாள் 13.02.2024

4.. வடமதுரை வட்டாரக் கல்வி அலுவலரின் நக எண் 338/அ4/2024 நாள் : .03.2024

********

திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் கல்விமாவட்டம், வடமதுரை ஒன்றியத்தில் பணிபுரியும் ஆசிரியர்கள் அரசுக்கு எதிராக போராட்டத்தில் கலந்து கொண்டு தகவலின்றி பணிக்கு வருகை புரியாத நாள்களை ஈட்டிய விடுப்பாக அனுமதிக்க தெளிவுரை வேண்டி கருத்துரு பெறப்பட்டுள்ளது .

கருத்துரு பரிசீலனை செய்யப்பட்டது . பார்வை 3 இல் காண் அரசுக்கடிதத்தில் தெரிவித்துள்ள படி மருத்துவ விடுப்பு தவிர பிற விடுப்புகள் அனுமதிக்கக்கூடாது என்பதால் சம்பந்தப்பட்ட ஆசிரியர்களின் கோரிக்கையை தற்போதைய நிலையில் ஏற்க இயலாது என வடமதுரை வட்டாரக் கல்வி அலுவலருக்கு தெரிவிக்கப்படுகிறது .

அரசுக்கு எதிராக போராட்டத்தில் (19.02.2024 முதல் 08.03.2024 வரை ) கலந்துகொண்ட ஆசிரியர்களுக்கு போராட்டத்தில் கலந்துகொண்ட நாள்களை சம்பளமில்லா விடுப்பாக அனுமதித்து பணிப்பதிவேட்டில் பதிவு செய்யவும் மேலும் 19 நாள்களுக்கு உரிய ஊதியம் மற்றும் பிற படிகள் ஊதியத்தில் ஒரே தவணையில் பிடித்தம் செய்யவும் வடமதுரை வட்டாரக் கல்வி அலுவலருக்கு தெரிவிக்கப்படுகிறது .

எனவே இனிவரும் காலங்களில் இது போன்ற கடிதங்கள் , தெளிவுரைகள் கேட்பதை தவிர்க்குமாறு வடமதுரை வட்டாரக் கல்வி அலுவலருக்கு அறிவுரை வழங்கப்படுகிறது .

மாவட்டக்கல்வி அலுவலர்,
(தொடக்கக்கல்வி)
ஒட்டன்சத்திரம்.

பெறுநர்

1. வட்டாரக்கல்வி அலுவலர், வடமதுரை

நகல் -

1. அனைத்து வட்டாரக்கல்வி அலுவலர்கள் ஒட்டன் சத்திரம் கல்வி மாவட்டம்
2. கோப்பிற்கு